இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

வேகமாக மாறி வரும் நமது காலநிலையானது இதற்கு சிறிதும் காரணமாயிராத குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கின்றது என்றும், உலகளாவிய அநீதியான இச்செயலையும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவின் போக்கையும் மாற்ற இன்னும் நேரம் இருக்கிறது என்றும் கூறியுள்ளார் மாலிக்.

# நம் அனைவரையும் பாதிக்கும் காலநிலை மாற்றம் மற்றும் தீவிர வானிலை



ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் வாழும் நம் அனைவரையும் காலநிலை மாற்றம் மற்றும் தீவிர வானிலையானது பாதிக்கின்றது என்றும், ஆசியாவில் ஏற்பட்டுள்ள பருவமழை வெள்ளத்தின் அளவு மற்றும் வேகம் மிகுந்த கவலை அளிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார் சேவ் த சில்ரன் பன்னாட்டு ஆசிய இயக்குனர் அர்ஷத் மாலிக்.

வேகமாக மாறி வரும் நமது காலநிலையானது இதற்கு சிறிதும் காரணமாயிராத குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கின்றது என்றும், உலகளாவிய அநீதியான இச்செயலையும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவின் போக்கையும் மாற்ற இன்னும் நேரம் இருக்கிறது என்றும் கூறியுள்ளார் மாலிக்.

உலக வானிலை அமைப்பின் கூற்றுப்படி, மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றம் உலகளாவிய வெப்பநிலையை அதிகரிக்கிறது என்றும், இது கடந்த 10 ஆண்டுகள் பதிவில் இல்லாத அளவுக்கு வெப்பமானவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் மாலிக்.

புதைபடிவ எரிபொருள் பயன்பாடு மற்றும் மானியங்களை விரைவாக நிறுத்துவதன் வழியாக வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது, அதிக குழந்தைகள் தீவிர வெப்பநிலைக்கு ஆளாகாமல் தடுப்பதற்கு மிக முக்கியமானது என்று வலியுறுத்தியுள்ள மாலிக் அவர்கள், தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் காலநிலை அதிர்ச்சிகளைச் சமாளிக்க உதவும் வகையில் நிதியுதவியை அதிகரிக்குமாறு அரசாங்கங்கள், நன்கொடையாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தையும் சேவ் தி சில்ட்ரன் கேட்டுக்கொள்கிறது என்றும் எடுத்துரைத்துள்ளார்.

பருவமழையானது அதிகமாகப் பொழியப்பட்டு, ஆசியாவின் பல நாடுகளுக்கு பேரழிவை ஏற்படுத்துகின்றது என்றும், பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தான வெள்ளத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார் மாலிக்.

கனமழையால் 130க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளனர், மேலும் பலர் பள்ளியை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று தெரிவித்துள்ள மாலிக் அவர்கள், சீனா, பாகிஸ்தான், தாய்லாந்து, லாவோஸ், பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகள், வழக்கத்தை விட முன்னதாகவே பெய்த பருவமழை காரணமாக, ஓரளவுக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட புயல்களால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் பகிர்ந்துள்ளார்.

வெள்ளத்தால் வீடுகள் மற்றும் பள்ளிகள் அழிக்கப்பட்டுள்ளன, குடும்பங்கள் தங்குமிடம் இல்லாமல், குழந்தைகள் கல்வி கற்க முடியாமல் தவிக்கின்றனர் என்று எடுத்துரைத்துள்ள மாலிக் அவர்கள், எடுத்துக்காட்டாக பிலிப்பீன்ஸில், அண்மைய வாரங்களில் பல வெப்பமண்டல சூறாவளிகள் நாடு முழுவதும் ஏறக்குறைய 1,350 வகுப்பறைகளை முற்றிலுமாக அழித்துவிட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# ஹிரோஷிமா, நாகசாகி அணுகுண்டுத் தாக்குதலின் 80-ஆம் ஆண்டு நினைவு





### விவரிக்க முடியாத பேரழிவை ஏற்படுத்தும் சக்தி கொண்ட ஆயுதங்களை கீழே போடுவதே உண்மையான அமைதி

ஹிரோஷிமா மற்றும் நாகசாகியின் அணுகுண்டுத் தாக்குதல்களின் 80ஆவது ஆண்டு நினைவானது, இதனால் உயிரிழந்தவர்கள், அன்புக்குரியவர்களைப் பிரிந்தவர்கள் போன்றோரின் இழப்பு மற்றும் துன்பக் கதைகள் பாதுகாப்பான உலகத்தைக் கட்டியெழுப்பவும் அமைதியின் சூழலை வளர்க்கவும் நம் அனைவருக்கும் சரியான நேரத்தில் அழைப்பு விடுக்கின்றன என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஆகஸ்டு 6, புதன்கிழமையன்று ஹிரோஷிமா மற்றும் நாகசாகியின் அணுகுண்டுத் தாக்குதல்களின் எண்பதாவது ஆண்டு நினைவை முன்னிட்டு ஹிரோஷிமா மறைமாவட்ட ஆயர் Alexis Mitsuru Shirahama அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அடிக்கடி எடுத்துரைக்கும் வார்த்தைகளான "போர் என்பது எப்போதும் மனித குலத்திற்கான ஒரு தோல்வி தான்" என்பதை நினைவுகூர்ந்துள்ள திருத்தந்தை அவர்கள், பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும், இரண்டு நகரங்களும் அணு ஆயுதங்களால் ஏற்பட்ட ஆழ்ந்த பயங்கரங்களின் உயிருள்ள நினைவூட்டல்களாகவே உள்ளன என்றும் எடுத்துரைத்துள்ளார்.

விவரிக்க முடியாத பேரழிவை ஏற்படுத்தும் சக்தி கொண்ட ஆயுதங்களை கீழே போடுவதே உண்மையான அமைதி என்றும், அணு ஆயுதங்கள் நமது பகிரப்பட்ட மனிதகுலத்தை புண்படுத்துகின்றன, மேலும் நாம் பாதுகாக்க அழைக்கப்பட்ட படைப்பின் மாண்பை இழக்கச் செய்கின்றன என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

உலகளாவிய பதட்டங்களும் மோதல்களும் அதிகரித்து வரும் நமது காலத்தில், ஹிரோஷிமா மற்றும் நாகசாகி "நினைவின் சின்னங்களாக" நிற்கின்றன என்றும், அவை நல்லிணக்கத்தின் அடிப்படையில் உறுதியளிக்கப்பட்டு அழிவின் அடிப்படையில் நிறுவப்பட்ட பாதுகாப்பு என்ற மாயையை நிராகரிக்க நம்மைத் தூண்டுகின்றன என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை.

நீதி, சகோதரத்துவம் மற்றும் பொது நன்மை ஆகியவற்றில் வேரூன்றிய ஒரு உலகளாவிய நெறிமுறையை நாம் உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள் இந்த யூபிலி ஆண்டானது, நமது முழு மனித குடும்பமும் நீடித்த அமைதியைப் பின்தொடர்வதற்கான உறுதிப்பாட்டை புதுப்பிக்க பன்னாட்டு சமூகத்திற்கு விடுக்கும் ஓர் அழைப்பாக அமைய வேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# ஜெர்மனி முதல் உரோம் வரை மிதிவண்டிப் பயணம்




மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள் தூக்கமின்றி மிதிவண்டியில் பயணித்து உரோம் நகருக்கு வந்திருக்கும் அருட்பணியாளர் Pawel Nowak அவர்கள், லோவென்ஹெர்ஸ் குழந்தை மருத்துவமனையை ஆதரிப்பதற்காக நிதி திரட்டுவதைத் தனது முயற்சியின் நோக்கமாகக் கொண்டவர்.

குணப்படுத்த முடியாத நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு உதவ ஜெர்மனியில் இருந்து உரோமிற்கு மிதிவண்டியில் பயணம் செய்த அருட்பணியாளர் Pawel Nowak பொது மறைக்கல்வி உரையின் இறுதியில் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களைச் சந்தித்தார்.

ஆகஸ்டு 6, புதனன்று திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களை பொதுமறைக்கல்வி உரையின் நிறைவில் சந்தித்து தனது பயணத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார் அருட்பணியாளர் Pawel Nowak.

ஜெர்மனியின் Syke நகரில் உள்ள Löwenherz என்னும் இடத்தில் உள்ள குழந்தைகளுக்கான மருத்துவமனைக்காக நிதி திரட்டுவதற்காக ஜெர்மனியில் இருந்து உரோம் வரை மிதிவண்டியில் ஏறக்குறைய 1,600 கிமீ தூரம் பயணம் செய்துள்ளார் அருட்பணியாளர் Pawel Nowak.

குணப்படுத்தப்பட முடியாத நிலையில் இருக்கும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக அம்மருத்துவமனைக்கு நிதி திரட்டும் அருட்பணியாளர் Pawel Nowak அவர்கள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் மருத்துவ உதவிக்காக நிதி வேண்டி ஆஸ்திரியாவிற்கு தனது அடுத்த மிதிவண்டிப் பயணத்தைத் தொடங்க இருப்பதாகக் வத்திக்கான் செய்திகளிடம் பகிர்ந்து கொண்டார்.

மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள் தூக்கமின்றி மிதிவண்டியில் பயணித்து உரோம் நகருக்கு வந்திருக்கும் அருட்பணியாளர் Pawel Nowak அவர்கள், லோவென்ஹெர்ஸ் குழந்தை மருத்துவமனையை ஆதரிப்பதற்காக நிதி திரட்டுவதைத் தனது முயற்சியின் நோக்கமாகக் கொண்டவர். அதற்கேற்றவாறு அவர் உரோம் நகருக்கு வந்தவுடன், 7,000 யூரோக்கள் நன்கொடையாகப் பெற்றார்.

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து பொது மறைக்கல்வி உரைக் கூட்டத்திற்குப் பிறகு, அவரது கைகுலுக்கி அவருடன் சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ள முடிந்தது என்றும் மகிழ்ச்சியுடன் கூறினார் அருட்பணியாளர் நோவாக்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# மலேசியா, சிங்கப்பூர், புருணை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் (CBCMSB) 116ஆவது மாநாடு:

## திருத்தூதுப்பணியிலும், எதிர்வரும் உலகளாவிய கூட்டங்கள் மீதும் கவனம் செலுத்துதல்

ஜோகூர் பாரு – மலேசியா, சிங்கப்பூர், புருணை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் (CBCMSB) 116ஆவது மாநாடு, மலேசியா மற்றும் திமோர்-லெஸ்டே திருத்தூதுப்பணித் தூதரகத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட ஆலோசகர் மான்ஸ்யோர் மார்செல்லஸ் ஷ்மைக்கேலின் உரையுடன் தொடங்கியது. திலியில் இருந்து கூகுள் மீட் மூலம் பேசிய அவர், பேராயர் வோஜ்சியேச் ஷாலுக்கி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். ஒவ்வொரு ஆயரும் தனிப்பட்ட வாழ்த்துக்களையும், தங்கள் மறைமாவட்டங்களுக்கான அழைப்புகளையும் தெரிவித்தனர்.

திருத்தந்தை லியோ XIV-இன் தேர்தல் குறித்து கார்டினல்கள் வில்லியம் கோ-வும்(சிங்கப்பூர்), செபாஸ்டியன் பிரான்சிஸ்-வும் (பினாங்கு) ஆகியோர் சிந்தித்து பகிர்ந்துக்கொண்டது ஒரு குறிப்பிடத்தக்க தருணமாகும். கார்டினல் கோ இதை "ஒரு அற்புதம்" என்று அழைத்தார், மேலும் கார்டினல் பிரான்சிஸ் "தூய ஆவியானவரின் வழிநடத்துதல்" என புகழ்ந்தார்.

CBCMSB தலைவர் பேராயர் ஜூலியன் லியாவ், 2018-ஆம் ஆண்டுக்குப் பிறகு, அடுத்த 'அட் லிமினா' (Ad Limina) வருகை 2026-ஆம் ஆண்டு மே 18 முதல் 23 வரை திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிவித்தார்.

### திருத்தூதுப்பணி (SYNOD) செயல்பாடு மற்றும் எதிர்காலத் திட்டங்கள்

இந்த மாநாட்டில், 2024-ஆம் ஆண்டுக்கான SYNOD திருத்தூதுப்பணி ஆவணத்தின் அமலாக்கம் குறித்து விவாதிக்கப்பட்டது. கார்டினல் மரியோ கிரெக் 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்திய 'Accompaniment Process' குறித்த கலந்துரையாடல்களும் இதில் அடங்கும். திருத்தூதுப்பணிப் பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நிகழ்வு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் 24 முதல் 26 வரை நடைபெறும். மான்ஸ்யோர் ஜூட் மிராண்டா, சகோதரி மார்கரெட் சான்ட் மரியா மற்றும் திரு. கிரிகோரி பிரவீன் ஆகியோர் உரோமைக்குச் செல்லும் பயணத்தில் CBCMSB-ஐ பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.

ஆசிய ஆயர்கள் மாநாட்டின் கூட்டமைப்பு (FABC), கார்டினல் பாப்லோ டேவிட் தலைமையில் ஒரு திருத்தூதுப்பணி ஆணையத்தை (Synodality Commission) நிறுவியுள்ளது. இதில் CBCMSB-ஐ பேராயர் ஜூலியன் லியோ பிரதிநிதித்துவப்படுத்துகிறார். ஆசிய-பசிபிக் ஆயர்களின் மன்றம் (Asia-Pacific Bishops' Forum) 2025-ஆம் ஆண்டு செப்டம்பர் 22 முதல் 26 வரை பாங்காக்கில் நடைபெறும்.

FABC XII மாநாடு, 2017-ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெறவிருந்தது, ஆனால் தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, தற்போது 2026-ஆம் ஆண்டு ஜூன் 22 முதல் 28 வரை இந்தோனேசியாவின் பாலியில் நடைபெறும்.



### தலைமைத்துவத் தகவல்கள் மற்றும் இடப் பார்வையிடல்

மாநாட்டின் முடிவில், தற்போதைய தலைவர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டது. ஆயர்கள் தங்கள் மறைமாவட்ட நடவடிக்கைகளைப் பற்றியும், எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும் தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர்.

உலு திராமில் உள்ள புனித பியோ ஆன்மிக மையத்திற்குச் சென்ற ஆயர்கள், அருட்தந்தை ஜோ மாத்யூஸ் OFM Cap மற்றும் அருட்தந்தை ஜான் ஆனந்தன் OFM Cap ஆகியோருடன் உரையாடி, மையத்தின் முயற்சிகளைப் பற்றி அறிந்து கொண்டனர்.

# பொதுக்காலம் 20ஆம் வாரம் – ஞாயிறு – 17-08-2025

## 'இயேசு மூட்டிய தீ, முதலில் நம்மில் பற்றி எரியட்டும்'

இன்றைய வாசகங்கள், வாழ்க்கை எப்போதும் மகிழ்ச்சியால் நிறைந்திருப்பதில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. நமது பயணம் ஒரு ரோஜா செடியைப் போன்றது. ஆம், சில நேரங்களில் அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும், ஆனால் அதன் முள்கள் நமக்கு வலியை ஏற்படுத்தக்கூடியவை என்பதை மறுப்பதற்கில்லை. அவ்வாறே, நற்செய்தி எல்லாருக்கும் நல்ல செய்தியாக அமைவதில்லை.

நமது முதல் வாசகத்தில், ஒடுக்கப்பட்ட யூதேயா மிகவும் துன்பகரமான காலங்களை எதிர்கொள்ளும் என எரேமியா அறிவிக்கிறார். பாபிலோனின் அரசன் படையெடுத்து யூதேயாவைக் கைப்பற்றுவான் என்றும், பின்னர் யூதர்களை அடிமைகளாகப் பாபிலோனுக்கு கொண்டுச் செல்வான் என்றும் அறிவுறுத்துகிறது. இது ஒரு கசப்பானச் செய்தியாகும்.

இரண்டாம் வாசகம், பாவக் காரியங்களிலிருந்து விலகும்படி நம்மை அறிவுறுத்துகிறது. ஏனென்றால் நாம் ஆண்டவராகிய இயேசுவால், அவருடைய இரத்தத்தினால் விலை கொடுக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளோம் என்று பவுல் கூறுகிறார். இயேசு நமக்காக துன்பப்படவும் இறக்கவும் தயாராக இருந்தார், எனவே நற்செய்தியின் பரவலுக்காக நாமும் துன்பப்பட தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

நற்செய்தியில், இயேசுவின் செய்தி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கூட, கருத்து வேறுபாடாக இருக்க காரணமாக இருக்கும் என்று அறிவிக்கிறார். ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் சொந்த வழிகளைத் தேடுபவர்களிடமிருந்து எதிர்ப்பைச் சந்திப்பார்கள். இது அநேக நேரங்களில் குடும்பத்தைப் பிளவுபடுத்தும் நிலையைக் கூட ஏற்படுத்தும் என்கிறார்.

ஆண்டவராகிய இயேசுவின் சீடராக வாழ்வது எப்போதும் ஒரு சுகமான அனுபவமாக இருக்காது. நற்செய்திக்குச் சவாலான அம்சங்களை நாம் பகிர்ந்து கொள்ளும்போது, மக்களும், ஏன், நம் சொந்த குடும்ப உறுப்பினர்களும் கூட நம்மை எதிர்க்கக்கூடும்.

தங்கள் சுயநல வாழ்க்கை முறைகளில் மகிழ்ச்சியாக இருப்பவர்கள், தங்கள் சுயநல வழிகளுக்குச் சவால் விடுபவர்களின் குரலை அடக்க விரும்புவார்கள். இது இயல்பானது. ஆனாலும், உண்மைக்காக நாம் நமது பணியைத் தொடர்ந்துதான் ஆக வேண்டும். பின்வாங்குவது சீடத்துவத்திற்கு அழகாகாது.

இயேசுவின்மீது கண்களைப் பதிய வைத்து, அவரது சாட்சிகளாக வாழ்கின்றபோது, சொந்தக் குடும்பமே நம்மை வெறுத்து ஒதுக்கலாம். நண்பர்கள்கூடப் பகைவர்கள் ஆகலாம். அதற்காக நாம் மனம்தளர்ந்து விடாமல், பரிசு பெற வேண்டிய இலக்கை (விண்ணரசு) நோக்கி மன உறுதியோடு ஓடுவோம். அப்போது கடவுள் நமக்குக் கட்டாயம் கைம்மாறுத் தருவார். இயேசுவுக்காக நாம் நமது சிலுவையைச் சுமந்துதான் ஆக வேண்டும். இயேசுவைப் பின்பற்றி வாழ வேறு குறுக்கு வழி கிடையாது. உலகம் ஆயிரம் வழிகளைக் காட்டும். அவையெல்லாம் நேர்வழி ஆகாது.

இயேசு வெறும் போதகராக மட்டும் அல்லாமல், ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்தார். அவர் மூட்டிய தீ, அவரது போதனைகளின் புரட்சிகர தன்மையையும், சமூகத்தில் அது ஏற்படுத்தும் தாக்கத்தையும் குறிக்கிறது. இயேசு மூட்டிய தீ, முதலில் நம்மில்பற்றி எரியட்டும், நம்மில் உள்ள தீயனவற்றை அது அழித்தொழிக்கட்டும்.

ஆர்.கே. சாமி, காஜாங்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.